**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.110/2023**

2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

அ.சா.4 (பட்டியல் சாட்சி–4) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி.பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செந்தில் | த/பெ.: | மாரிமுத்து |
| கிராமம்: | கீழையூர் | தாலுக்கா: | கீவளூர் |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 43 | முகவரி: | கீழையூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 27.06.2025

**முதல் விசாரணை :–**

நான் தற்போது மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை தெரியும். மற்ற சாட்சிகளையும் தெரியும். கடந்த 27.10.2022–ம் தேதி மாலை 06.00 மணியளவில் வேணுகோபால் வீட்டருகே ரமேஷ் என்பவர் அ.சா.1–ஐ கம்பியால் அடித்தார். அதன் பிறகு வேணுகோபால் என்பவர் கட்டையை எடுத்து வந்து அடித்தார். பின்னர் அவரது மகன் 2 பேர் அங்கு வந்து அடித்து கம்பி, கட்டையால் அடித்து வயலில் தூக்கி போட்டு விட்டனர். அதன் பிறகு அவரது மனைவியும், சில நபர்களும் வந்தனர். 108 ஆம்புலன்ஸ் –க்கு தகவல் கொடுத்து திருவாரூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்.

<u>**மறு விசாரணை :– இல்லை.**</u>

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.